No. of Printed Pages : **11**

**7452**

**A**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# PART - III

# வணிகவியல் / COMMERCE

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

1. ஆட்சேர்ப்பு வழிமுறைகளில் அகவளங்களில் இடம் பெறாத ஒன்று __________.

(அ) நேர்முகத் தேர்வு (ஆ) பதவி உயர்வு

(இ) பதவி இறக்கம் (ஈ) வேலைச் சுழற்சி

The one which does not include in the Internal Sources of recruitment process is :

(a) Walkins (b) Promotion

(c) Demotion (d) Job rotation

2. மூலதனச் சந்தை என்பது __________ க்கான ஒரு சந்தை ஆகும்.

(அ) நீண்ட கால நிதி

(ஆ) குறுகிய கால நிதி

(இ) குறுகிய கால நிதி மற்றும் நடுத்தர கால நிதி ஆகிய இரண்டும்

(ஈ) நடுத்தர கால நிதி

Capital market is a market for :

(a) Long term finance

(b) Short term finance

(c) Both Short term and Medium term finance

(d) Medium term finance

3. நுகர்வோர் சங்கங்களின் சர்வதேச அமைப்பு (IOCU) முதன் முதலில் நிறுவப்பட்ட ஆண்டு :

(அ) 1967 (ஆ) 1960 (இ) 1987 (ஈ) 1965

The International Organisation of Consumer Union (IOCU) was first established in the year :

(a) 1967 (b) 1960 (c) 1987 (d) 1965

4. இயக்குநர்கள் நிறுமத்தின் பணத்திற்கு __________ ஆகிறார்கள்.

(அ) முகவர் (ஆ) வங்கியாளர்

(இ) பொறுப்பாண்மையாளர்கள் (ஈ) பங்குதாரர்கள்

Directors are __________ of the company's money.

(a) Agent (b) Banker

(c) Trustees (d) Holder

5. __________ என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்.

(அ) உற்பத்தியாளர் (ஆ) நுகர்வோர்

(இ) சில்லறை வியாபாரி (ஈ) மொத்த வியாபாரி

__________ is the King of Modern Marketing.

(a) Producer (b) Consumer

(c) Retailer (d) Wholesaler

6. சந்தையிடுகை முறையின் ஆரம்பநிலை __________.

(அ) பண்டமாற்று முறை (ஆ) முற்றுரிமை முறை

(இ) தற்சார்பு உற்பத்தி (ஈ) பணத்திற்கு மாற்றுதல்

The initial stage of Marketing System is __________.

(a) Barter System (b) Monopoly System

(c) Self Producing (d) Exchange to Money

7. முதலில் வேலை, அடுத்தது மனிதர் என்பது ஒரு __________ கோட்பாடு ஆகும்.

(அ) பயிற்சி (ஆ) சோதனை (இ) பணியமர்த்தல் (ஈ) நேர்காணல்

Job first, man next is one of the principles of __________.

(a) Training (b) Test (c) Placement (d) Interview

8. சரக்கு விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு :

(அ) 1930 (ஆ) 1940 (இ) 1960 (ஈ) 1997

Sale of Goods Act was passed in the year :

(a) 1930 (b) 1940 (c) 1960 (d) 1997

9. பயிற்சி பெறுபவர் உயர் அதிகாரி அல்லது மூத்த தொழிலாளர்கள் மூலம் பயிற்சியை பெறும் முறை :

(அ) பங்கேற்று நடித்தல் முறை

(ஆ) தொழிற்சாலைக்குள் பயிற்சி முறை

(இ) தொழில் பழகுநர் பயிற்சி முறை

(ஈ) புதுப்பிக்கும் பயிற்சி முறை

When trainees are trained by Supervisor or trainer or Senior worker, it is called :

(a) Role play
(b) Vestibule training
(c) Apprenticeship training
(d) Refresher training

10. நிறுமம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து __________ மாதத்திற்குள் முதல் ஆண்டு பொதுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

(அ) 18 (ஆ) 12 (இ) 21 (ஈ) 15

From the date of its incorporation the First Annual General Meeting is to be conducted within __________ months.

(a) Eighteen (b) Twelve (c) Twenty one (d) Fifteen

11. முந்தைய பங்குதாரர்களுக்கு எவ்வித கட்டணமும் இல்லாமல் வெளியிடும் பங்குகள் :

(அ) உரிமைப் பங்குகள் (ஆ) ஊக்கப் பங்குகள்

(இ) முன்னுரிமை பங்குகள் (ஈ) சாதாரணப் பங்குகள்

The shares which are offered to the existing shareholder at free of cost is known as __________.

(a) Right Shares (b) Bonus Shares
(c) Preference Shares (d) Equity Shares

12. குறியிலக்கு மேலாண்மைச் செயல்முறையின் முதல் நிலை எது ?

(அ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது

(ஆ) முக்கிய முடிவுப் பகுதியை நிர்ணயிப்பது

(இ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

(ஈ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது

Which is the first step in the process of Management By Objectives ?

(a) Matching resources with objectives
(b) Fixing key result area
(c) Defining organisational objectives
(d) Appraisal of activities

**13.** சந்தையிடுகையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது :

(அ) வாடிக்கையாளரின் பின்புலம் (ஆ) வாடிக்கையாளரின் தகுதி

(இ) வாடிக்கையாளரின் தேவைகள் (ஈ) பொருளின் தரம்

The marketer initially wants to know in the marketing is __________.

(a) Background of the customers (b) Qualification of the customers

(c) Needs of the customers (d) Quality of the product

**14.** எத்தனை மாதங்களுக்குப்பின் காசோலை காலாவதியாகிறது ?

(அ) 5 (ஆ) 3 (இ) 7 (ஈ) 4

A Cheque will become stale after __________ months.

(a) 5 (b) 3 (c) 7 (d) 4

**15.** __________ ல் நிர்வாக செயல்பாடுகளும் உள்ளடங்கியுள்ளது.

(அ) பணியமர்த்துதல் (ஆ) ஒருங்கிணைத்தல்

(இ) ஒழுங்கமைத்தல் (ஈ) கட்டுப்படுத்துதல்

__________ is included in every managerial function.

(a) Staffing (b) Co-ordinating

(c) Organising (d) Controlling

**16.** நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் பதிவு செய்வதில் பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

(அ) புகார் அளிப்பவர் தனிப்பட்ட முறையிலோ அல்லது முகவர் மூலமாகவோ அல்லது அஞ்சல் வழியாகவோ புகார் அளிக்கலாம்.

(ஆ) பொருள் அல்லது சேவையில் குறைபாடு ஏற்பட்ட தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள் புகார் பதிவு செய்யப்பட வேண்டும்.

(இ) புகார் அளிக்க வழக்கறிஞர்களை ஈடுபடுத்த வேண்டிய அவசியமில்லை.

(ஈ) முத்திரைத்தாளில் புகார் மனு அளிக்க வேண்டிய அவசியமில்லை.

Find out the one which is not relevant to register the complaint in Consumer Court.

(a) Complaint can be registered, in person by the complainant or by post or by his authorised agent.

(b) Complaint must be registered within 6 months from the date of defect in goods or service.

(c) It is not necessary to involve the advocates in lodging the complaint

(d) Stamp paper is not required for declaration.

17. __________ இந்தியாவை உலகளாவிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையமாக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

(அ) ஸ்டார்ட் அப் இந்தியா (ஆ) டிஜிட்டல் இந்தியா

(இ) வடிவமைப்பு இந்தியா (ஈ) இந்தியாவில் தயாரிப்பு திட்டம்

__________ is designed to transform India to a Global design and manufacturing hub.

(a) Startup India (b) Digital India

(c) Design India (d) Make in India

18. இரண்டு முக்கிய வாணிபச் சூழல்கள் __________ ஆகும்.

(அ) நல்லது மற்றும் கெட்டது

(ஆ) நேர்மறை மற்றும் எதிர்மறை

(இ) அனுமதிக்கத்தக்கது மற்றும் அனுமதிக்க முடியாதது

(ஈ) உட்புறச் சூழல் மற்றும் வெளிப்புறச் சூழல்

The two types of business environment are __________.

(a) Good and Bad

(b) Positive and Negative

(c) Allowable and Unallowable

(d) Internal and External

19. கீழ்க்குறிப்பிடப்பட்டவைகளில் எது மேலாண்மைப் பணி அல்ல ?

(அ) அமைப்பாற்றல் (ஆ) திட்டமிடல்

(இ) கட்டுப்பாடு காத்தல் (ஈ) சந்தையிடல்

Which one of the following is not classified into Managerial functions ?

(a) Organising (b) Planning

(c) Controlling (d) Marketing

**20.** கீழே குறிப்பிடப்பட்டுள்ள எது காலம் தாழ்த்தும் பழமை விரும்பி தொழில் முனைவோருக்குப் பொருந்தாது ?

(அ) ஐயப்படுவது (ஆ) பழமை பேணுவது

(இ) மாற்றிக் கொள்வது (ஈ) இடர் வெறுப்பது

Which one of the following is not a characteristic of a Fabian Entrepreneur ?

(a) Sceptical (b) Conservative

(c) Adaptive (d) Risk averse

## பகுதி - II / PART - II

குறிப்பு : **ஏதேனும் 7** வினாக்களுக்கு விடையளிக்கவும். அதில் வினா எண் **30 -ற்கு கட்டாயம்** விடையளிக்க வேண்டும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **compulsory**.

**21.** மேலாண்மையின் துணைப்பணிகளைப் பட்டியலிடுக.

List the subsidiary functions of Management.

**22.** நுகர்வோர் என்பவர் யார் ?

Who is a Consumer ?

**23.** புதிய பொருளாதாரக் கொள்கைகளின் கிளைகளை எழுதுக.

State the branches of New Economic Policy.

**24.** விதிவிலக்கு மேலாண்மையின் பொருள் தருக.

Bring out the meaning of Management By Exception (MBE).

**25.** சரக்கு விற்பனை ஒப்பந்தம் என்றால் என்ன ?

What is a Contract of Sale of Goods ?

**26.** மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார் ?

Who are the participants in a Capital Market ?

**27.** ''பகராள்'' - சிறு குறிப்பு வரைக.

Write short notes on "Proxy".

**28.** பங்குச் சந்தை என்றால் என்ன ?

What is meant by Stock Exchange ?

**29.** ஏலமிடுதல் என்பதன் பொருள் யாது ?

What do you mean by Auctioning ?

**30.** ஒரு நிறுமத்தின் பின்வரும் முடிவுகளை நடைமுறைப்படுத்த மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள் எவை ?

(அ) நிறுமத்தின் நோக்கத்தை மாற்றுவதற்கு

(ஆ) பங்காதாயங்கள் அறிவிப்பதற்கு

What kind of resolutions are required to implement the following decisions of a company ?

(a) To change the objectives of the company.

(b) To declare the dividends.

## பகுதி - III / PART - III

குறிப்பு : **ஏதேனும் 7** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயம்** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

**31.** நிதிச் சந்தையின் பொருள் தருக.

Give the meaning of Financial Market.

**32.** 'மேலாண்மை' - வரைவிலக்கணம் தருக.

Define the term - 'Management.'

**33.** சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை ?

What are the objectives of Marketing ?

**34.** மாற்றுச்சீட்டின் சிறப்பியல்புகளைக் கூறுக. (ஏதேனும் 3)

What are the characteristics of a Bill of Exchange ? (any 3)

**35.** நிழல் இயக்குனர் என்று யாரை அழைக்கிறோம் ?

Who is a Shadow Director ?

**36.** தொழில் முனைவோர் மற்றும் மேலாளர் இவர்களை வேறுபடுத்திக் காட்டுக. (ஏதேனும் 3)

Distinguish between entrepreneur and manager. (any 3)

**37.** செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன ?

What is meant by artificial scarcity ?

**38.** உலகமயமாக்கலின் ஏதேனும் மூன்று தாக்கங்களை எழுதுக.

State any three impacts of Globalisaton.

**39.** சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன ?

What do you mean by Statutory Meeting ?

**40.** நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டிருக்கும் உங்களிடம் கேட்கப்படலாம் என எதிர்பார்க்கும் ஏதேனும் மூன்று கேள்விகளை எழுதவும்.

Write any three of the expected questions that would be asked during your interview.

## பகுதி - IV / PART - IV

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) மனிதவள மேலாண்மையின் செயல்பணிகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலை சந்தையை வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

(a) Discuss the operative functions of HRM.

**OR**

(b) Distinguish between New Issue Market and Secondary Market. (any 5)

**42.** (அ) பணியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான முக்கியமான நேர்காணலின் வகைகளை விளக்குக. (ஏதேனும் 5)

**அல்லது**

(ஆ) குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை ? (ஏதேனும் 5)

(a) Explain the important methods of Interview. (any 5)

**OR**

(b) What are the major advantages of Management By Objectives ? (any 5)

**43.** (அ) காசோலை மற்றும் மாற்றுச்சீட்டினை வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

**அல்லது**

(ஆ) மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகளை விவாதிக்கவும்.

(a) Distinguish a Cheque and a Bill of Exchange. (any 5)

**OR**

(b) Discuss the characteristics of a Capital Market.

**44.** (அ) தொழில் முனைவோரின் சிறப்பு இயல்புகள் யாவை ? (ஏதேனும் 5)

**அல்லது**

(ஆ) வியாபாரத்தின் பரந்தச் சூழலின் பங்கு பற்றி விவரிக்கவும். (ஏதேனும் 5)

(a) What are the characteristics of an entrepreneur ? (any 5)

**OR**

(b) Discuss the role of macro-environment factors of business. (any 5)

**45.** (அ) பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரிக்கவும். (ஏதேனும் 5)

**அல்லது**

(ஆ) நுகர்வோரின் பொறுப்புகள் யாவை ? (ஏதேனும் 5)

(a) Differentiate between the Money Market and Capital Market. (any 5)

**OR**

(b) What are the responsibilities of Consumers ? (any 5)

**46.** (அ) செபியின் அதிகாரங்களை விவரிக்கவும். (ஏதேனும் 5)

**அல்லது**

(ஆ) சிறு குறிப்பு வரைக :

(i) டிஜிட்டல் இந்தியா

(ii) ஸ்டார்ட் அப் இந்தியா

(a) Explain the powers of SEBI. (any 5)

**OR**

(b) Write short notes on :

(i) Digital India

(ii) Startup India

**47.** (அ) பணி வழிப் பயிற்சிக்கும், பணி வழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ? (ஏதேனும் 5)

**அல்லது**

(ஆ) இயக்குனரின் தகுதிகள் பற்றிக் கூறுக.

(a) What are the differences between on the job training and off the job training ? (any 5)

**OR**

(b) State the qualifications of Directors.

**- o O o -**